இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்கு தொடர்பாக செயற்குழுவின் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் கட்டளை (119/4) தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற தொடர் இல. 79

மாவட்ட செயலகம், வவுனியா.

இல	அரச கணக்கு செயற்குழுவினால் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்	கணக்கீட்டு அலுவலரால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்	தற்போதைய முன்னேற்றம்
01	உள்ளகக் கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	கால அடிப்படையில் உள்ளகக்கணக்காய்வு ஐயவினா பதிவேட்டினை பேண அறிவுறுத்தப்பட்டுள்ளது	உள்ளகக் கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது
02	கடனாளிகளின் பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை	கடன் பதிவேட்டினை காலஅடிப்படையில் இற்றைப்படுத்தி பேண அறிவுறுத்தப்பட்டுள்ளது.	கடனாளிகளின் பதிவேடு பேணப்பட்டு வருவதுடன் தற்போதுவரை இற்றைப்படுத்தப்பட்டுள்ளது
03	செலவுப் பயன்பாட்டுப் பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை	செலவுப் பதிவேட்டினை கால அடிப்படையில் இற்றைப்படுத்திப் பேண அறிவுறுத்தப்பட்டுள்ளது.	செலவினப் பதிவேடு ஏற்கனவே பேணப்பட்டு வருகின்றது.
04	ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை	ஆபத்துக்கள் தொடர்பான பதிவேட்டினை இற்றைப்படுத்தப் பேண உரிய அலுவலருக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது.	2022ம் ஆண்டு ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடு தயாரிக்கப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டே உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஓவ்வொரு நிதியாண்டிற்கும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது
05	2004.05.11 ஆம் திகதிய 171/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச்சொல்லை கணக்காளர் அல்லது அவரிடம் அனுமதி பெற்றுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் மட்டும் பயன்படுத்தவில்லை.	எல்லாக்கணக்காளர்களுக்கும் முதலாவது கடவுச்சொல்லைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச்சொல் கணக்காளர் / அனுமதி பெற்று உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது
06	2004.05.11 ஆம் திகதிய 171/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்ககள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படவில்லை.	எல்லாக கணக்காளர்களுக்கும் உரியவாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	மென்பொருள் தொடர்பான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் தற்போது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றது

07	உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன.	ஊள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு அவை கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் முன்ரிமை வழங்கி விடையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டு குறித்த காலப்பகுதிக்குள் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வு ஐயவினா கிடைக்கப்பெற்று ஒரு மாத காலத்திற்குள் அதற்குரிய பதில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
08	நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய அலுவலருக்கு நி.பி.134(2) நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.	ஓவ்வெரு வருட ஆரம்பத்திலும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அது கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அதன் பிரதி தேசிய கணக்காய்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றது. அ தன் அடிப்படையிலேயே 2022ம் ஆண்டு உள்ளகக் கணக்காய்வுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் தேசிய கணக்காய்வு அலுவலர்களின் ஆலோசனைகளையும் பெற்று உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படும்.
09	அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை.	உரிய பொறுப்பு வாய்ந்த அலுவலர்களுக்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.	மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படும் வாகனங்கள் (NP GJ 7353,NP HC 3778, 149-2389, NP JC 0669) உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் மூன்று வாகனஙகளுக்கான ˙ உரிமை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
10	அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை	அனைத்து குழும வாகனங்களுக்கும் தேசிய சின்னம் வரைய அறிவுறுத்தப்பட்டுள்ளது.	அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படடுள்ளது
11	ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை.	அரச நிதிச் சுற்றறிக்கை 1/2020 க்கு அமைவாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விசேட சரிபார்த்தல் அடையாளம் காணும் குழு மற்றும் மதிப்பீட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு கடந்த 08.08.2024 அன்று மதிப்பீட்டு நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.	தற்போது பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் HA/FA/15/Dispose/Common-2024 இலக்க 2024.08.21 திகதிய கடிதத்திற்கமைவாக NP HC 3778,NP JC 0669, NP UZ 2806, NP JL 7284, NP TJ 7490,NP GF 5982 ஆகிய வாகனங்களை அகற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12	ஓவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை	நிதிப்பிரமானங்களின் படி ஓவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் கணக்காய்வு முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கை எடுக்கும் படி பிரதம கணக்காளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	வாகன இலக்கம் WPPA 4892 வாகன விபத்துக் காரணமாக ஏற்பட்ட உண்மை நட்டம் ரூபா 201,000.00 தொடர்பான இறுதி அறிக்கை நி.பி 104(4) படி சாரதி திரு.S. ஜசிந்தன் என்பவரிடமிருந்து 2023 மே மாதத்திலிருந்து இதுவரை ரூபா. 134,000.00 நட்டம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் மிகுதி ரூபா 67,000.00 ஆனது 2025 ஏப்ரல் மாதம் வரை அறவிட வேண்டியுள்ளது. அதன் பின்னர் பதிவழித்தல் கட்டளை நி.பி 109 படி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
13	ஏற்புடைய ஏற்பாடுகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	சேகரிக்கப்பட்ட வருமானங்களை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஏற்புடைய ஏற்பாடுகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானம் மீளச்செலுத்தப்பட்டுள்ளது.
14	திரட்டப்பட்ட வருமானம்,நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டு அல்லது அவற்றை வைப்புக்கணக்கில் வைப்பிலிட்டு ஒருமாதத்திற்கு குறைவான காலப்பகுதியில் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை.	திரட்டப்பட்ட வருமானங்களை வைப்புக்கணக்கில் வைக்காது நேரடியாக வருமானக் கணக்கிற்கு வரவு வைக்க சகல கணக்காளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	திரட்டப்பட்ட வருமானம் வருமானக் கணக்கில் ஒருமாத காலத்திற்குள் வரவு வைக்கப்படுகின்றது
15	ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் சார்பாக வசூலிக்கப்பட்ட வருவாய்கள் குறித்த காலப்பகுதிக்குள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்படவில்லை.	இது தொடர்பாக எல்லா கணக்காளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.	ஏனைய கணக்கியல் உத்தியோகத்தர்கள் சார்பாக வசூலிக்கப்பட்ட வருவாய்கள் குறித்த காலப்பகுதிக்குள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது
16	சேவை இணைப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தவிர அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்தொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.	நியமனம் பொது நிர்வாக அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. ஆளணி அறிக்கை மாதாந்தம் அமைச்சிற்கு அனுப்பப்படுகின்றது.	மாவட்ட செயலக பணியாட்தொகுதியினருக்கான ஆட்சேர்ப்பு, நியமனம் பொது நிர்வாக அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் அனுமதியளிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக உள்ளவர்களை உள்ளக இடமாற்றத்தின் போது கவனத்தில் கொள்ளப்பட்டு ஆளணி சீராக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
17	மாவட்ட வீடமைப்புக் குழு மாதந்தோறும் கூட்டப்படவில்லை	வீடமைப்பு கருத்திட்டங்களுக்கான மேற்பார்வை கடமை திட்டமிடல் பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.	தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கான 2022 ஆண்டுக்காக வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கு எந்த ஒதுக்கீடும் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே ஒழுங்கான மாதாந்த கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.முக்கியமான பிரச்சனைகள் மாத்திரம் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

18	மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு மாதந்தோரும் கூட்டப்படவில்லை	தெளிவான அறிவுறுத்தல்கள் மாவட்ட உதவிப்பணிப்பாளர் அவர்கட்கு பசளை வழங்கப்பட்டுள்ளது.	வவுனியா மாவட்ட விவசாய அமைச்சு அலுவலகத்தினால் மாதமொரு முறை மாவட்ட விவசாய குழு கூட்டம் நடாத்தப்படகின்றது. விவசாய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைத்து திணைக்களங்களுக்கும் பொறுப்பான அதிகாரிகள் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் உரம் சம்பந்தமான விடயங்களும் கலந்துரையாடப்படுகின்றது. மேலும் வருடத்திற்கு இரு முறை பெறும்போகம் மற்றும் சிறுபோகத்திற்கான கலந்துரையாடல் மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் விடய உத்தியோகத்தர்கள், உர நிறுவனங்கள், கமக்காரர் அமைப்புக்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டு வருகின்றது. இவ் வருடத்திற்கான பெரும்போக கலந்துரையாடல் 2024/25 நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.
19	மாவட்ட விலை நிர்ணயக்குழு கூட்டங்கள் மாதந்தோரும் நடைபெறவில்லை	மாவட்ட பொறியியலாளருக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	2022ம் ஆண்டு நாட்டில் பொருளாதாரப் பிரச்சனை ஏற்படுவதற்கு முன்னர் முதலாம் அரையாண்டு இரண்டாம் அரையாண்டு என இரு தடவைகளே மாவட்ட விலை நிர்ணயக்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. எனினும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சனை காரணமாக சிறிய கால அவகாசத்தினுள் பொருட்களின் விலைகளில் அதிக மாற்றம் ஏற்பட்டமையினால் ஒவ்வெரு மாதமும் விலை நிர்ணயக்குழு கூட்டங்கள் நடாத்தும் படி அறிவுறுத்தப்பட்டது. ஆனால் தற்போது பொருட்களின் விலைகளில் அதிக மாற்றம் நடைபெறாமையால் முதலாம் அரையாண்டு, இரண்டாம் அரையாண்டு என இரு தடவைகள் மட்டுமே விலை நிர்ணயக்குழு கூட்டங்கள் நடாத்தப்படுகின்றது.
20	நிறுவனம் பற்றி பொது மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்காக வெப்தளமொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை	பொது மக்களுக்கு தகவல்களை வழங்கக்கூடியவாறு தரவுதளமென்றை பராமரிக்கும் படி கேட்கப்பட்டுள்ளார்	மாவட்ட செயலகம், வவுனியா பற்றி தேவையான தகவல்களை வழங்கக் கூடியவாறு வெப்தளமொன்று உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.
21	நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற வெப்தளம் மூலமாக பொது மக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை	பொது மக்களுக்கு முறைப்பாடுகளை பதிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மாவட்ட செயலகத்தினால் பராமரிக்கப்படும் வெப்தளத்தில் பொது மக்கள் தங்களது முறைப்பாடுகளை பதிவிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

22	ஓட்டுமொத்த பணியாட்தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைசச்சாத்திடப்பட்டிருக்கவில்லை	ஒரு சிரேஷ்ட பதவிநிலை அலுவலர் இந்த செயலாற்றுகை உடன்படிக்கைகள் செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்	2023 ஆம் ஆண்டிலிருந்து பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான செயலாற்றுகை உடன்படிக்கைகள் செய்யப்பட்டு வருவதுடன் ஏனைய பணித் தொகுதியினருக்கும் மேற்படி உடன்படிக்கைகள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
23	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான ஒப்புதலளிக்க மறுக்கின்ற பாதகமான மட்டத்தில் நிலவியது.	நிதிக்கூற்றுக்கள் மீதான இந்தக்கணக்காய்வு அபிப்பிராயம் தொடர்பாக அவதானம் செலுத்த பிரதம கணக்காய்வாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது	2018 ஆம் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11(1)இன் படி நிதிக்கூற்றுக்களின் மீது 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கு தகமை பெற்ற அபிப்பிராயம் கிடைத்துள்ளது.
24	இனங்காணப்பட்ட சேவை இலக்குகளை அடைவதை அளவிடுவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	இனங்காணப்பட்ட சேவை இலக்குகளை அடைவதற்கு அளவிட ஒரு முறைமை வடிவமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	GA/VA/FOB/KPI/02/19/23 ஆம் இலக்க 2023.06.22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஒரு குழுவினை நியமித்து இனங்கானப்பட்ட சேவை இலக்குகளையும் அளவீடுகளையும் அளவு மட்டத்தினையும் இனங்கன்டு சேவை இலக்குகளை அடைவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அக்குழுவினால் 2023.06.22,23,28 மற்றும் 2023.07.07 இத் திகதிகளில் பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக தனித்தனி மதிப்பீடுகளுக்கான ஒரு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச்செட்டிகுளம் ஆகிய பிரதேச செயலகங்களின் சேவைச்சுட்டியை அளவீடு செய்யும் நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளதுடன் வவுனியா பிரதேச செயலகத்தில் மட்டும் முதன்மை செயற்பாட்டு குறிகாட்டிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.
25	மீளாய்வு ஆண்டின் செயல்த்திறன் நேக்கம் குறிப்பிட்ட திகதிக்குள் சமர்ப்பிக்கப்படவில்லை	செயற்பாட்டுத்திட்டத்தின் வினைத்திறனின்மைகளை நீக்க சரியான நடவடிக்கை எடுக்கப்படும்.	2022,2023 மற்றும் 2024 ம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.
26	இனங்கண்ட செயற்சுட்டியின் அடைவு 24%ஐ விட குறைந்த மட்டத்தில் நிலவியது	பொருத்தமான அடையாளப்படுத்தப்பட்ட குறிகாட்டிகளை இனங்கண்டு முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	தற்போது அடையாளங்காணப்பட்ட செயற்சுட்டியின் அடைவு மட்டத்தை திருப்திகரமான மட்டத்திற்கு முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்படட்டுள்ளது. GA/VA/FOB/KPI/02/19/23 ஆம் இலக்க 2023.06.22ம் திகதிய கடிதத்தின் மூலம் ஒரு குழுவினை நியமித்து இனங்கானப்பட்ட சேவை

27			இலக்குகளையும் அளவீடுகளையும் அளவு மட்டத்தினையும் இனங்கன்டு சேவை இலக்குகளை அடைவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அக்குழுவினால் 2023.06.22, 23, 28 மற்றும் 2023.07.07 இத் திகதிகளில் பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக தனித்தனி மதிப்பீடுகளுக்கான ஒரு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச்செட்டிகுளம் ஆகிய பிரதேச செயலகங்களின் சேவைச்சுட்டியை(Service Indicatir) அளவீடு செய்யும் நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளதுடன் வவுனியா பிரதேச செயலகத்தில் மட்டும் முதன்மை செயற்பாட்டு குறிகாட்டிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.
27	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்படடிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50%ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது.	ஒரு சிரேஷ்ட பதவி நிலை அலுவலர் பொறுப்பாக நியமிக்கப்பட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தேசிய பாதீட்டு சுற்று நிருபம் இல. 03/2022, 2022.04.26 ஆம் திகதிய சுற்று நிருபத்தின் 02ம் பந்தியின் படி திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களை செலவீன கட்டுப்பாடு காரணமாக நடாத்த முடியவில்லை. மேலும் அலுவலர்களின் சேவைப் பிரமாண குறிப்பிற்கிணங்க அவசியமாக வழங்க வேண்டிய பயிற்சிகள் மாத்திரம் வழங்கப்படுகின்றது.
28	கணக்காய்வார் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை	கணக்காய்வார் தலைமை அதிபதியின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கணக்காய்வார் தலைமை அதிபதியின் அறிக்கையின் சிபாரிசுகள் உரியவாறு அமுல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
29	பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள் / கட்டளைகள் செயல்ப்படுத்தப்படவில்லை	பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் கட்டளைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள் / கட்டளைகள் உரியவாறு அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் புத்தகங்கள், ஏடுகள் மற்றும் அவை தொடர்பான ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகின்றது.
30	அரச உத்தியோகத்தர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை.	அரச அலுவலர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்தல் படிவம் பூரணப்படுத்தி பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	அனைத்து அலுவலர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தெடர்பான படிவத்தினை ஆகஸ்ட் 31இற்குள் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படடுள்ளனர்.

31	நிதி பிரமானக் குறிப்பின் 156(1) பிரிவின் படி அதிகாரிகளால் அரசுக்கு ஏற்பட்ட இழப்புக்களக்கு அதிகாரிகள் மீது கட்டணம் வசூலிக்கப்படவில்லை	நிதிப்பிரமானங்களின் படி அரச அதிகாரிகளால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவிட பிரதம கணக்காளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	வாகன இலக்கம் WPPA 4892 வாகன விபத்தக் காரனமாக ஏற்பட்ட உண்மை நட்டம் ரூபா.201,000.00 நட்டம் தொடர்பான இறுதி அறிக்கை நி.பி 104(4) படி சாரதி திரு.S. ஜசிந்தன் என்பவரிடமிருந்து 2023 மே மாதத்திலிருந்து இதுவரை ரூபா. 134,000.00 நட்டம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் மிகுதி ரூபா 67,000.00 ஆனது 2025 ஏப்ரல் மாதம் வரை அறவிட வேண்டியுள்ளது. அதன் பின்னர் பதிவழித்தல் கட்டளை நி.பி 109 படி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் வாகன இலக்கம் NPKQ 6216 வாகன விபத்தக் காரனமாக ஏற்பட்ட உண்மை நட்டம் ரூபா.946,451.47 இல் ரூபா 553,108.00 காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டதுடன் மிகுதி வாகன விபத்து நட்டம் திரு.A. சிவநாதன் என்பவரிடமிருந்து நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் வழக்கு இல. MC/762/MT/ 21 வழங்கிய தீர்ப்பின்படி ரூபா 350,000.00 இல் இதுவரை ரூபா 285,000.00 அறவீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மிகுதி அறவிட வேண்டிய தொகை ரூபா 65,000.00 நீதிவான் நீதிமன்ற கட்டளையின் படி 2024.10.14 அறவிட வேண்டியுள்ளது. அறவீடுகள் பூர்த்தியானதன் பின்பு மிகுதி நட்டம் ரூபா 43,343.47 க்கு பதிவழித்தல் கட்டளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
32	நிதி பிரமானக் குறிப்பின் 119 இன்படி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படவில்லை	கட்டளையிடப்பட்ட மேலதிக கட்டணங்களை உரியவாறு அறவிட எல்லா கணக்காளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	கணக்காய்வு முகாமைத்துவ கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு நி.ப.119 இன்படி கட்டளையிடப்பட்ட மேலதிக கட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
33	அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை	பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த இடமாற்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.	அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றம் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த இடமாற்றத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. மேற்படி இடமாற்றம் மாவட்டத்திற்குள்ளேயே மேற்கொள்ளப்படுவதால் மாவட்டத்திற்குட்பட்ட உள்ளக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை.

34	மாவட்ட சுற்றச்சூழல் குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்படவில்லை.	மாவட்ட சுற்றச்சூழல் கூட்டத்தினை இரண்டு மாதங்களுக்கொரு தடவை நடாத்தவும் அதனை கண்காணிக்க உதவி மாவட்ட செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளது.	வவுனியா மாவட்ட சுற்றச்சூழல் தொடர்பான விடயங்கள் சுற்றச்சூழல் குழு உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட விவசாய குழு கூட்டம் காணி பாவனை திட்டமிடல் கூட்டம் சிறுவர் பெண்கள் அபிவிருத்தி கூட்டம் மற்றும் மாவட்ட ஒருங்கினைப்பு குழு கூட்டங்களில் முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்படுவதனால் தனியாக சுற்றச்சூழல் குழு கூட்டம் என்ற ஒன்று நடாத்துவதற்கான தேவை ஏற்படுவதில்லை

பி.ஏ.சரத்சந்திர,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
வவுனியா.

ப.அ.சரத்சந்ர
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
வவுனியா.

A.S சசிகரன்,
பிரதம கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
வவுனியா.

அ.சி.சசிகரன்,
பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
வவுனியா

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்